1979 ஏப்ரல் 30]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பிரிக்காவின் எந்த இடத்தில் வீடு கட்டுவது பொதுமக்களுக்கு நன்மை விளைவிக்குமோ அதற்கேற்ற வகையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். அலுவலகத்திற்கும் இடம் ஒதுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; கேள்வி 877 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

எஸ். கொடிக்குளம் பஞ்சாயத்து

*வினா எண். 878 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி எஸ். கொடிக்குளம் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரி பற்றி அண்மையில் அரசுக்கு புகார் மனு ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு அதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : (அ) புகார் மனு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வந்துள்ளது.

(ஆ) சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரி தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் மீதான குற்றச்சாட்டுகள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : அந்தக் குற்றச்சாட்டுகள் நகரசுத்தித் தொழிலாளர்களுடைய சம்பள ரூபாயை பொய்க் கையெழுத்திட்டு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்குள்ள இ. ஓ. சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார். விசாரணை நடைபெறும்போது பெருமாள் என்ற ஒரு ஆள் ஊழலில் சம்பந்தப்பட்டவர் பெரிய இடத்துப் பிள்ளை என்ற காரணத்தால் சில சிபாரிசுகளின் மூலமாகப் பணியில் சேர்க்கப் பட்டிருக்கிறாரா ? அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரூராட்சி சிப்பந்திகள் சம்பளப் பட்டுவாடா விதிகளுக்குப் புறம்பான முறைகள் பின்பற்றப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. நிர்வாக அதிகாரி தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார், இளநிலை உதவியாளர் சுகாதார மேஸ்திரியிடம் சமாதானம் பெற்று அதன் அடிப்படையில் ஊதிய உயர்வு ஓராண்டுக்காலம் நிறுத்திவைக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டுள்ளார். தவறுசெய்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. முறைகேடு எதுவும் இல்லை.